உ

84

# ஸ்கந்தன்



# பஞ்சாமிர்தம்

"KALAA POOSHANAM"
K.S.SIVAGNANARAJAH
RETIRED VICE PRINCIPAL
ADIYAPATHAM ROAD
KOKUVIL WEST

உ

## ஸ்கந்தன்

# பஞ்சாமிர்தம்




## கே. எஸ். சிவஞானராஜா

யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி

கந்தரோடை ~ சுன்னாகம்


**03-04-2003**

நூல்:- **ஸ்கந்தன் பஞ்சாமிர்தம்**
SKANTHAN
PANCHCHAMIRTHAM

ஆக்கம்:- **கே. எஸ். சிவஞானராஜா**
**இசை ஆசிரியர்**
**யா./ ஸ்கந்தவரோதயக் கல்லூரி**
**கந்தரோடை,**
**சுன்னாகம்.**

வெளியீடு:- **சங்காபிஷேகநாள்**
**03 : 04 : 2003 வியாழக்கிழமை**

மதிப்பு:- **நூறு ரூபா**

அச்சகம்:- **ஸ்ரீ சாயி பிறின்டேர்ஸ்**
கே. கே. எஸ். வீதி, பூநாறி மரத்தடி,
யாழ்ப்பாணம்.

உரிமை:- **ஆசிரியர்க்கே**

# சுன்னைநகர் பொற்கோயில்

தீராத முருகபக்தியினால் கைகூடப்பெற்ற நம்பிக்கைப் பிரசாதம் பஞ்சாமிர்தம் இதனை இலட்சியம் செய்பவர்களுக்கு இனிப்பாக அமையும் என்பது, அர்ப்பணிப்புள்ள இறையன்பர்களுக்கு எளிதாகப் புரிந்துகொள்ள முடியும். ஸ்கந்தப் பெருமானைப் போற்றிடும் முதலாவது கவிதை ஆவணம். என்பேனாவை என்னால் தடுக்கமுடியவில்லை. ஆதலால் இது ஒரு நம்பிக்கை அமுது. ஆலயம் கட்டிய பின்னர் அறம் வென்று ஆனந்தம் காலிக்கிறது இதன்பிரகாரம் சுன்னைநகருக்கு இது ஒரு பொற் கோவிலாக அமைகிறது. என்னைப் பாடவைத்த முருகனிடம் என்றும் அடிமையாகவே இருக்கவும், நையாத மனத்தினனை நைவிக்கவும், எண்ணிய கருமம் சித்திக்கவும் படைக்கப்பட்டதே பஞ்சா மிர்தம். தூயமனதோடு ஏற்றுக்கொள்ளுங்கள்.

*ஆசிரியர்:* **கே. எஸ். சிவஞானராஜா**

2003-03-28

# பால முருகனின் பிரதிஷ்டை

தண்மரு தம்மிளிர் தவமொடு கலைதரு

தயவுகந் தபதி கந்தரோடை

தாங்கிய வளமொடு தலம்பல அமைந்திடு

தக்கள ழிற்பதி கந்தரோடை

கண்ணென வாழ்வினில் ஒளிதரு வைபவம்

கருதிய மாகும் பாபிஷேகம்

கருத்தொடு நூதன ஆலயம் உருப்பெறக்

கந்தப்பெ ருமானின் சிந்தை யன்றோ

பண்தரு சூழலில் போற்றக் கொழும்பு வாழ்

பழைய மாணவர் கட்டினரே

பைந்தமிழ் சைவமும் பாலித்து ஓங்கிடப்

**பாலமுருகனின் பிரதிஷ்டை**

உண்மையில் மாமல்ல புரத்தினில் வடித்த

உருதிரு முருகனின் அருளாட்சி

உத்தம அதிபர் சிவாஜி தலைமையில்

உகந்த வரோதயம் வாழியவே.

# பால முருகன் துணை

வற்றாக்கை அம்மனருள் ஆனந்தப் பிள்ளையும்

வடிவழகு கற்பொக் கணையும்

வாலிதாம் ஸ்கந்தன்திருக் கோவிலாம் நூதன

வல்லசிவ பாலமுருகன்

பொற்றாள் நாதமோ டுகந்ததிரு மணியொலியும்

பொலிவு தரு அருளாட்சியும்

பூர்வீகமான மூதாதயைர் புரிந்திட்ட

புண்ணியப் பேறுதானோ

முற்றாக ஆராயின் முடிவேந்தர் அரசாண்ட

மும்மாரி பொழிந்த நாடு

முத்துநற் சம்பாவும் மொட்டைக் கறுப்பனும்

மலையாக விளைந்த நாடு

**பற்றாது என்றசொல் பாவனையில் இல்லையே**

பாலிக்கும் கந்தரோடை

பயமொன்று மில்லையே ஸ்கந்தவ ரோதயா

பாலமுருகன் துணையே.

## விரும்பிடக் கரும்பாகு மூர்

அரசுஆல் மரங்களும் அங்கங்கு சோலையும்

அழகான நீர்ச்சுனைகளும்

அங்கிங் கெனாதபடி அகன்ற நீள்வயல்களும்

அச்சொட்டா யுகந்தரோடை

விரசமொன் றிங்கில்லை வில்லங்க மேதில்லை

**விரும்பிடக் கரும்பாகு மூர்**

விண்பார்த்து விளையவே கண்பார்க்கு மழகுடைய

வியத்தகு முவப்பான வூர்

சரசுவதி இலட்சுமியும் சுவாமி ஐயப்பனும்

சந்திரசே கரப்பிள்ளையும்

சக்திசிவ காமிமண வாள சிவனாலயம்

சூழ்ந்தவடி வான சுகந்தம்

உரசுநா கலிங்கமர நீழலில் குடியிருக்கும்

உலப்பிலா ஆனந்த முருகா

உளமார வணங்கநீ தந்தவருட் பேறிது

ஓம்முருகா பாலனே.

# பொற்கோவில் எமக்கிது

கோவிலில் லாக்குறை நீக்கிட விரும்பிய

கொழும்புவாழ் மாணவர்கள்

கூட்டிய நிதியினால் கோபுரக் கோயிலைக்

கட்டினர் திருவருளினால்

காவுயர் சோலையிது மேவுமுயர் பீடமிது

கந்ததிரு சிவாஜி அதிபர்

கைகொடுத்துதவிய ஆறுதிருமுருகனும்

கரமீந்த ஆசிரியர்கள்

நாவினால் பாராட்டத் திருவருட்செல்வமோ

நம்பிக்கையோ டெழுப்ப

நல்லதோராலயம் உருப்பெற்ற அற்புதம்

நாளை எமக்கென்றும் வெற்றி

பூவினால் பாவினால் நாவினால் என்றுமே

பூபாளம் பாடிடுவோம்

**பொற்கோவில் எமக்கிது புண்ணியப் பேறிது**

புவனேந்தர வாலாயமே.

## உள்ளபடி வெல்ல வைக்கும்

வாழ்க்கையில் முன்னேற வேண்டினால் உனக்கொரு

வரையறை வாழ்வு வேண்டும்

வாசமுற வீடதனில் காசுபணம் ஓங்கிவர

வடிவழகன் முருகனை நினை

ஆழ்மனதி லரசோச்சும் நல்லூர் கதிர்காமம்

அருள்செல்வச் சந்நிதியை

அப்பப்பா முருகனின் ஆனந்தக் கோலமதை

இங்கேயும் கண்டேனப்பா

ஊழ்வினைப் பயனதனை ஒருமுருக நாமமே

**உள்ளபடி வெல்ல வைக்கும்**

உயர்கல்வி பட்டங்கள் பதவியெளிதாகுமே

ஒருமுறை சொல்லு முருகா

தாழ்வில்லை நாள்தோறும் தமிழழகன் முருகனை

தயவோடு நீ நினைப்பாய்

தக்கபடி கந்தவ ரோதய மாணவர்

தலைமேல் பணிந்தேத்துவார்.

# மோகனப் பேறு

அருட்கவி ஐயாவும் இயலிசை வாரிதியும்
அன்னைசிவத் தமிழ்ச் செல்வியும்
ஆதியாம் நல்லைமணி சிற்பி ஐயாவும்
ஆளுந்துணை வேந்தருமே
பிரம்ம அருள் ஸ்ரீமகா தேவக் குருக்களும்
பிரம்மகுரு இரவிச்சந்திரரும்
பெருகுசோ மேஸ்வர ஐயரும் கூடவே
பேற்றினை ஊட்டினரே
திருவருட் செல்வமும் செல்வரா சாவுமே
திருநிலைப் படுத்தினரே
திவ்வியக் கருவறை பவ்வியத்தூபியும்
திருத்தகு மண்டபமும்
மருவிய கோமுகி துருவிய தூண்களும்
மந்திரப் பீடங்களும்
மாதவப் பிள்ளையும் இராஜராஜேஸ்வரியும்
மோகனப் பேறாகுமே.

# சந்தோஷம் பெருகும்

கந்தைய வள்ளலின் சிந்தையி லெழுந்தபெரு

கல்லூரிக்கிது சொந்தமே

கங்கையின் நீருடன் காவிய மண்களும்

கலந்துமே கட்டிய கோவில்

விந்தைய சிந்தையர் விரும்பி வார்த்துவிட்ட

விஸ்தாரமோ விமானம்

வித்தகக் கல்விவிஞ் ஞானக் கணிதமும்

விஞ்சும்கவின் கலைகளும்

நொந்தவர்க் கபயமும் நொய்யவே உரைத்திடும்

நூதன ஆலயமே

நூதன மூர்த்தியோ பால முருகனின்

நோக்கிய கனிவதனால்

சந்தத மும்புகழ் சந்ததி விருத்தியும்

சாற்றிடு நெறிமுறையும்

சாலவும் ஓங்கிடும் சரிநிகர் பேணிடு

**சந்தோஷம் பெருகுமினியே.**

# பாடுவாய் ஸ்கந்தனையே

கண்டபிணி நீங்கிடக் கால(ன்) பயம் அகன்றிடக்

கவலையாவும் தீர்ந்திட

கல்நெஞ்சங் கரைந்திடக் காமுகா் ஓடிட

கல்லாதவா் உணர்ந்திட

பெண்பாவம் மறைந்திடப் பொல்லாதவா் ஓடப்

பொறாமையும் நலிவுகொள்ள

பூமிக்கு ஆகாத சாமிக்கு ஏற்காத

பொக்கங்கள் போயகல

மண்ணீந்த வளமதனை மண்ணாக்க எண்ணிடும்

மானிடா்கள் தெளிவுகொள்ள

மாலைமரி யாதையே மனிதமாய் எண்ணிடும்

மலிந்தநெறி தெளிவாக்கிட

பண்ணார்ந்த பண்பாடு பக்குவம் நிறைந்தகுரு

பயபக்தி கொண்டுனைப் பாட

பதினாறு பேறுகள் தானாக வந்திடும்

பாடுவாய் ஸ்கந்தனையே.

# மூவுலகை ஆளலாம்

அன்புசால் மாணவச் செல்வங்கள் யாவரும்

அறிய வேண்டிய தொன்றுண்டு

அடக்கமாய் ஒழுக்கமாய் அவசரப்படாமலும்

ஆற்றுங்கள் நும்கல்வியை

இன்பமாய் நாளுமே வாழ்ந்திடத் தானேதான்

**இவ்வுலகம் உங்களுக்கு**

இறைபக்தி யொன்றுதான் எதிர்ப்புகளை வெல்லுமே

இன்று அது பேருண்மையே

ஒன்பதோ வல்லதொரு எண்ணுக்குள் எத்தனை

உலகத்தின் ஆட்சியுண்டு

உண்மையாய் நடவுங்கள் ஒருபயமில்லையே

உங்களுக்கே முருகன்

முன்புவாழ் சமூகமோ முறையாக வாழ்ந்ததால்

முருகபதம் வாழ்வாயிற்று

முருகனை ஒருபோதும் மறவாத வாழ்வுதான்

மூவுலகை ஆளுமன்றோ.

# பாலனைக் காண வாரீர்

வற்றாத செல்வமும் வாழ்வுதரு பதிகளும்
வளமாகும் கந்தரோடை
வண்ணமெழிற் சோலையும் விண்ணோங்கு மாடமும்
வாவென்றழைக்கும் கிராமம்
சுற்றாடலோ மருதநிலமதனில் நெல்விளையும்
சுன்னைநக ரீந்த சொத்து
சூரியர் சந்திரர் போல்நீடு வாழவே
**சுடர்விட்டு அறிவு தருமே**
தொற்றாத பேறிங்கு, தொல்லை யொன்றிங்கில்லை
தொன்மைநெறி காக்கின்ற வூர்
துள்ளிவிளையாடவும், பள்ளிதனில் வளரவும்
தூயபண் பாடு மிளிரும்
பற்றாத தொன்றில்லைப் பாலிக்கும் கோவில்கள்
பற்பல உண்டு பாரீர்
பாலனே முருகனாய் ஸ்கந்தவப் பதியுறை
பாலனைக் காண வாரீர்.

# எற்றைக்கும் நான் அடிமையே

கும்பாபிஷேகமதை சங்காபிஷேகமதைக்
கூப்பினால் சௌபாக்கியமே
கோடியே புண்ணியம் கண்களால் பாருங்கள்
காலிக்கும் ஆனந்தமே
எம்பாவ வினைகளோ எட்டியே போய்விடும்
ஏக்கங்கள் வாராதிங்கு
எண்ணிய கருமங்கள் சித்திக்கும் உண்மையிது
எல்லாமே வெற்றி யுனக்கு
நம்பாலிடத்துக் குறை காணவே வருவோரை
நல்பதில் சொல்லி யனுப்பு
நாளைய சமுதாயம் ஓடிவந்தேயுனை
நாவாரப் போற்றும் முருகா!
எம்மாலியன்றது பணிசெய்து கிடப்பதே
**எற்றைக்கும் நான் அடிமையே**
ஸ்கந்தாவை நம்பியே வந்தவர் அனைவரும்
இனிதாக வாழ வேண்டும்.

# நம்பிக்கை அமுது

**ஸ்கந்தன் பஞ்சாமிர்தம் யாவர்க்கும்**
**நம்பிக்கை அமுதாக என்றைக்கும்**
**வரமளிப்பதாக.**

***திரு. க. சிவாஜி அவர்கள்***
அதிபர், யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

03-04-2003

# மோகனப் பேறிது

அவனருளாலே யாவும் நல்லபடியாக அரங்கேறிவருவது கண்டு நான்பூரிப்படை கின்றேன். ஸ்கந்தன் பஞ்சாமிர்தமானது யாவர்க்கும் மோகனப் பேற்றினை வழங்கி, வாழ்வளிப்பதாகத் திகழட்டும்.

செஞ்சொற்செல்வர்
**திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்**
யாழ். ஸ்கந்தவரோதயக் கல்லூரி.

03-04-2003

ஸ்கந்தன் பஞ்சாமிர்தம்

எல்லோர்க்கும் கிடைத்திட

வாழ்த்தும்



## திரு. திருமதி சரவணபவன்

20, யுனிப்பர் கிறெசன்ற்

சோக் பாம்,

இலண்டன்



# கீதாசாரம்

எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது.
எது நடக்க இருக்கிறதோ, அதுவும் நன்றாகவே நடக்கும்.
உன்னுடையதை எதை இழந்தாய், எதற்காக நீ அழுகின்றாய்.?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய் அதை வீணாக்குவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை நீ கொடுத்தாயோ அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகின்றது.
இதுவே உலக நியதியும் எனது படைப்பின் சாரம்சமாகும்.

